பக்கங்கள் 16
விலை ரூ. 50
புதன் பொய்கை
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 38
கதிர் : 144
புதன்கிழமை 19 ஏப்ரல் 2023
சித்திரை 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# யாழில் கொரோனா தீவிரம்; 5 பேருக்கு ஒட்சிசன் வழங்கல்!

## ஒருவர் ஆபத்தான கட்டத்தில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 5 பேருக்கு தனிமைப்படுத்தல் விடுதியில் வைத்து ஒட்சிசன் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் ஒருவர் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வருவதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. »15

நாகபூஷணி அம்மன் சிலை;

## எழுத்துமூலச் சமர்ப்பணங்களை முன்வைக்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நாகபூஷணி அம்மனுக்குச் சிலை வைக்கப்பட்டுள்ள விவகாரத்தில், எழுத்துமூல சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு தெரிவித்துள்ள யாழ்ப்பாண »15

# கொரோனாச் சோதனைகளை முன்னெடுக்கவே வேண்டாம்!

## சுகாதார அமைச்சு கண்டிப்பான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று கொழும்பு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. »15

## வெள்ளை ஈயின் தாக்கம் வடக்கில் விஸ்வரூபம்!

துறைசார் அதிகாரி எச்சரிக்கை

விரிவு:- பக்.15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுகளை அதிகரிப்பதற்காக தேசிய அரசு அமைத்தால் பேரழிவு

## எச்சரிக்கின்றார் உதய கம்மன்பில எம்.பி.



**கொழும்பு, ஏப்.19**

**அமைச்சுகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் தேசிய அரசு நிறுவப்படுமானால் அது நாட்டுக்குப் பேரழிவாகவே அமையும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், உத்தர லங்கா சபாகய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

தேசிய அரசமைப்பதற்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் விடுக்கவுள்ளார். இந்த அழைப்பை எதிர்வரும் 24 ஆம் திகதி ஜனாதிபதி விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் தேசிய அரசில் 'உத்தர லங்கா சபாகய (விமல், வாசு, கம்மன்பில கூட்டணி) இணையுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய அரசு தொடர்பான யோசனையை 2022 ஏப்ரல் 8 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் எமது அணிதான் முன்வைத்தது. எனினும், அந்த யோசனையை அவர் ஏற்கவில்லை.

தேசிய அரசு அமைக்கப்பட வேண்டுமானால் அதற்கு முன்னர் பொதுவானதொரு வேலைத்திட்டம் அவசியம். அந்த வேலைத்திட்டத்தை அடிப்படையாக வைத்தே ஆதரிப்பதா அல்லது இல்லையா என்ற முடிவுக்கு எதிரணிகளால் வரக்கூடியதாக இருக்கும்.

மாறாக அமைச்சுப் பதவிகளை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் தேசிய அரசு அமைக்கப்படுமானால் அது நாட்டுக்கு மற்றுமொரு அழிவாகவே அமையும்.

பொது வேலைத்திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் ஆராய்ந்து எமது முடிவு அறிவிக்கப்படும் - என்றார். (எ-44)

# இலங்கையின் குரங்குகள் சீன ஆய்வுகூடங்களுக்கே

*வனவிலங்கு முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.19

இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகள் சீனாவின் ஆய்வுகூடங்களுக்கே செல்லப்போகின்றன. அவை அங்கு சித்திரவதைகளை எதிர்கொள்ளவுள்ளன. வன விலங்கு விவகாரங்களுக்கான முன்னாள் அமைச்சர் என்ற வகையில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைக் கடுமையாக எதிர்க்கின்றேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

இது ஓர் அருவருப்பான செயல். இலங்கையின் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் சட்டத்துக்கும் இது எதிரானது என்பதால் விலங்குகளை ஏற்றுமதி செய்வது தொடர்பில் சிந்திக்கக்கூடாது.

இலங்கையில் பாதுகாக்கப்படும் அருகிவரும் உயிரினங்களை பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது. மிருகக்காட்சிச் சாலைகளுக்கு இடையிலான பரிவர்த்தனை அடிப்படையிலேயே இவற்றை அனுப்பவேண்டும்.

குரங்குகள் ஆய்வுகூடங்களைச் சென்றடையலாம், சித்திரவதை செய்யப்படலாம் என்பதை நன்கு அறிந்துள்ள போதும் அவற்றை ஏற்றுமதி செய்வது மனிதாபிமானமற்ற நடவடிக்கை. குரங்குகள் அழகான விலங்குகள். தங்களின் இயல்பான வாழ்விடத்தில் முழுமையான வாழ்வை வாழ்வதற்கு அவற்றுக்கு உரிமையுண்டு - என்றார். (எ-இ)

# வெளியானது விசேட வர்த்தமானி அறிவித்தல்

கொழும்பு, ஏப்.19

நான்கு துறைகளை அத்தியாவசியச் சேவைகளாகப் பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விசேட வர்த்தமானி ஜனாதிபதி செயலாளர் ஈ.எம். எஸ். பி. ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரம் வழங்கல், பெற்றோலிய உற்பத்தி மற்றும் எரிபொருள் வழங்கல் விநியோகம், தபால் சேவை, சுகாதார சேவை ஆகிய நான்கு சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தேசிய அரசு உருவாக்கும் தீர்மானம் எதுவும் இல்லை

*மஹிந்த அமரவீர தெரிவிப்பு*



தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை. தேசிய அரசாங்கம் தொடர்பாக எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்து வருகின்றார் என்றும், நாடாளுமன்றத்தில் இது தொடர்பான அழைப்பை விடுப்பார் என்றும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் வினவப்பட்டபோதே விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் எதுவும் கலந்துரையாடவில்லை என்றும் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதேவேளை, தற்போது நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் தேவைக்காக தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதற்கு ஆதரவு வழங்கும் என்று அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைப்பதாக இருந்தால் அதில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். தற்போதுள்ள அரசாங்கத்தில் மொட்டுக் கட்சியைச் சேர்ந்த 4 அமைச்சர்கள் உள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சர்கள் இருவர் உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் இருவர் உள்ளனர். தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உள்ளனர். அதனால் இதுவும் ஒரு தேசிய அரசாங்கம்தான்.

எதிர்காலத்தில் திட்டமிட்ட கலந்துரையாடல்கள் மூலம் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் மொட்டுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் என்று சாகல காரியவசம் தெரிவித்தார். (எ-6)

# குரங்கு விவகாரம் தொடர்பில் இலங்கை - சீனா பேசவில்லை

*அரசாங்கம் கூறுகின்றது*

கொழும்பு, ஏப்.19

இலங்கையில் உள்ள குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களுக்கு இடையே இன்னும் எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் 'குரங்கு விவகாரம்' பற்றி அமைச்சரவையில் பேசப்பட்டதா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த விவகாரம் தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களுக்கிடையே எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை. சீனாவில் உள்ள தனியார் நிறுவனமொன்றால், மிருகக் காட்சிச்சாலைக்குத் தேவையான குரங்குகளை பெறலாமா? என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் குழுவொன்றை விவசாயத் துறை அமைச்சர் நியமித்துள்ளார். இது தொடர்பில் அவர் அமைச்சரவைக்கு தெரியப்படுத்தினார்.

விலங்கு கொடுக்கல் வாங்கலின்போது கடும் சட்டம் நடைமுறையில் இருக்கும். சீனாவிலும் கடும் சட்டம் உள்ளது. விலங்குகளை இறைச்சிக்காக உயிருடன் வழங்குவது தொடர்பில் சட்டம் இல்லை - என்றார். (எ-44)

# தேசிய அரசுக்கு ஆதரவு இல்லை!

*சஜித் விசேட அறிவிப்பு*

மக்கள் ஆணையற்ற ஜனாதிபதியுடன் இணைந்து ஒருபோதும் தேசிய அரசு அமைக்கப்படமாட்டாது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்தார்.


தேசிய அரசமைப்பதற்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 25ஆம் திகதி விடுக்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே எதிர்க்கட்சி தலைவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தேசிய அரசமைப்பது தொடர்பில் இந்த அரசுடன் நான் எவ்வித பேச்சும் நடத்தவில்லை. எமது கட்சியும் நடத்தவில்லை. அதேபோல பிரதமர் பதவி, அமைச்சு பதவிகள் பற்றியும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த அரசுடன் கலந்துரையாடவில்லை. எனினும், மக்களைத் திசை திருப்புவதற்காக போலித்தகவல்களை இந்த அரசு சமூகமயப்படுத்திவருகின்றது. மக்கள் ஆணை கிடைக்காத இந்த ஜனாதிபதியுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கமாட்டோம். எந்தவொரு பதவிகளையும் ஏற்கவும் மாட்டோம்' என்றார் சஜித். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த எரிபொருள் ஒதுக்கீடு: இவ்வாரமும் தொடரத் தீர்மானம்



**கொழும்பு, ஏப்.19**
**புத்தாண்டை முன்னிட்டு அதிகரிக்கப்பட்ட எரி பொருள் ஒதுக்கீட்டை இந்த வாரமும் தொடர எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

அதிகரிக்கப்பட்ட ஒதுக்கீடு இன்று (நேற்று) புதுப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க தெரிவித்தார். எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்ட நாள்களின், நுகர்வு உள்ளிட்ட புள்ளிவிவரங்களை ஆராய்ந்த பின்னர், அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை தொடர்வதா என்பது தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, கடந்த 4ஆம் திகதி நள்ளிரவு முதல் வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கம் அதிகரிக்கப்பட்டது. முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கம் 5 லீற்றரில் இருந்து 8 லீற்றராகவும், மோட்டார் சைக்கிள்களுக்கான எரிபொருள் ஒதுக்கம் 4 லீற்றரில் இருந்து 7 லீற்றராகவும் அதிகரிக்கப்பட்டது.

பஸ்களுக்கு 40 லீற்றரில் இருந்து 60 லீற்றராகவும், கார்கள் மற்றும் சிற்றூர்திகளுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும், பாரவூர்திகளுக்கு 50 லீற்றரில் இருந்து 70 லீற்றராகவும் எரிபொருள் ஒதுக்கம் அதிகரிக்கப்பட்டிருந்தது. (ஏ-6)

## எம்.பிக்களின் நிலைப்பாட்டை பெற அனுமதி

கொழும்பு, ஏப்.19
சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி உடன்படிக்கையின் முக்கியமான கொள்கை நடவடிக்கைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
அவர்களைச் சட்டமியற்றும் செயல்முறைக்குள் சேர்க்க நடவடிக்கை எடுப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஏ-இ)

## அரைச்சொகுசு பஸ் சேவை அடுத்த மாதம் முதல் இரத்து

கொழும்பு, ஏப்.19
அரைச்சொகுசு பஸ் சேவைகள் அடுத்த மாதத்தின் பின்னர் இரத்துச் செய்யப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அரைச்சொகுசு பேருந்துகள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரான்டா தெரிவித்துள்ளார்.
போக்குவரத்து அமைச்சின் அறிவுறுத்தலின்படி அரைச்சொகுசு சேவையை சாதாரண சேவையாகவும், சொகுசு சேவையாகவும் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
அனைத்து பஸ் உரிமையாளர்களும் தங்களது பஸ்களை சாதாரண சேவையாகவோ அல்லது சொகுசுச் சேவையாகவோ மாற்றவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, இந்த நடைமுறை தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## கடந்த மாதம் 453.06 மில். டொலர் கொள்வனவு

கொழும்பு, ஏப்.19
இலங்கை மத்திய வங்கி கடந்த மாதம் 453.06 மில்லியன் அமெரிக்க டொலரைக் கொள்வனவு செய்துள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணி சந்தையில் டொலர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
கடந்த ஜனவரி மாதம் 348.79 மில்லியன் டொலரையும், பெப்ரவரி மாதம் 287 டொலரையும் மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது.
ஆண்டின் முதல் 3 மாதங்களில் மத்திய வங்கி மொத்தமாக ஆயிரத்து 88.85 மில்லியன் டொலரைக் கொள்வனவு செய்துள்ளது. இந்தக் காலப் பகுதியில் 226.17 மில்லியன் டொலரை விற்பனை செய்துள்ளது.
மத்திய வங்கி வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஏ-இ)

## தேசிய அரசு தொடர்பில் ஆராய்ந்தே தீர்மானம்!

### மொட்டுக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஏப்.19
தேசிய அரசு அமைப்பது தொடர்பில் எமது கட்சி இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. அவ்வாறானதொரு யோசனையை ஜனாதிபதி முன்வைத்தால் அது தொடர்பாக ஆராய்ந்து கட்சி உரிய முடிவை எடுக்கும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.
தேசிய அரசமைப்பதற்கான யோசனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்படவுள்ளது என்று கூறப்படும் நிலையில், அது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஆட்சியமைப்போம் என ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தார். அதற்கு எதிர்க்கட்சிகள் சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தவில்லை.
நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை தீர்க்கும் நோக்கிலேயே தற்போதைய ஜனாதிபதிக்கு நாம் ஆதரவு வழங்கினோம். எமது எதிர்பார்ப்பை அவர் நிறைவேற்றியுள்ளார். நாங்கள் மீண்டும் அவரின் முயற்சிக்கு ஆதரவு வழங்குப்படும் - என்றார். (ஏ-44)




வடக்கின்ர முந்தின முதலமைச்சர் ஒரு சைவப்பழம். வேலையில இருந்து பெஞ்சன் எடுத்த பிறகு, கன இடங்களில தமிழில சொற்பொழிவெல்லாம் செய்திருக்கிறார். இப்பவும் ஆள் வெளியில வரேக்க, நெத்தியில விபூதிக்குறியும், சந்தன - குங்குமப் பொட்டும் எண்டு ஆளைப் பார்த்தாலே கையெடுத்துக் கும்பிடோனும் மாதிரி இருக்கும். அப்பிடிப்பட்டவர் இப்ப இஞ்ச சைவத்துக்கு நடக்கிற அக்கிரமங்கள் பற்றி அடக்கி வாசிக்கிறார். வெறும் அறிக்கையையும் கேள்வி பதிலையும் பேப்பர்களுக்கு அனுப்பிறதோட தன்ர கடமை முடிஞ்சுதெண்டும் நினைக்கிறார் போல. சனத்தோட சனமா இறங்கி வேலை செய்யிறதுக்கு ஆள் ரெடி இல்லை. போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடந்தால் மக்களின்ர பிரதிநிதியா தான் கலந்துகொள்ளுறதை விட்டிட்டு, தன்ர பிரதிநிதியா 'உடையாரின்ர பொல்லு மாதிரி' வேற ஆரையும் தான் அனுப்பி வைக்கிறார். வெயிலுக்குள்ள வந்து நிண்டு போராடினால் கறுத்துப்போடுவார் எண்டு பயமோ தெரியேலை.

அவர் எம்.பி.யாகின பிறகு என்ன செய்யிறார் எண்டு சனத்துக்கும் ஒரே குழப்பமா இருக்கு. ஆளை கண்ணால கண்டே கனநாள் எண்டு சனம் மட்டுமில்லை, கட்சிக்காரரும் புலம்பத் தொடங்கிட்டினம். சனத்தையும், கட்சிக்காரரையும் மட்டும்தான் சந்திக்க அவருக்கு நேரமில்லை. ஆனால், ஆளுநர் மாதிரி பெரிய ஆக்களை மட்டும் சந்திக்கிறார், ஆலோசனையும் அவைக்குச் சொல்லுறார். அதில ஆகப்பெரிய பகிடி என்னெண்டால் மாகாணசபையையே கேலிக்கூத்தாக்கின முன்னாள் முதலமைச்சரிட்ட, இப்ப நியதிச்சட்டமொண்டை உருவாக்கி மூக்குடைபட்ட ஆளுநர்போய் அட்வைஸ் கேக்கிறாராம். 'மக்களின்ர பிரதிநிதியெண்டால், சனத்திட்டப் போய் அதுகளின்ர பிரச்சினையைக் கேக்கிறதை விட்டிட்டு, ஆளுநருக்கு அட்வைஸ் பண்றதுதான் அவரின்ர வேலை எண்டால், பேசாமல் எம்.பி. பதவியை ரிசைன் பண்ணிட்டு, ஆளுநரின்ர ஆலோசகராப் போகலாமே?' எண்டு அவரின்ர கட்சிக்காரரே கதைக்கினமாம்.

இதைவிட அவரைப் பற்றி இன்னொரு முக்கியமான விசயத்தையும் சொல்லியே ஆகோனும். முன்னாள் முதலமைச்சர் நாடறிஞ்ச ஒரு தமிழ்ச் சொற்பொழிவாளர். முந்தி கொழும்பில இருந்தாலும், இப்ப வடக்கில வந்து தமிழ்ச் சனத்தின்ர வாக்கில தான் முதலமைச்சராவும், பிறகு எம்.பி.யாவும் வந்தவர். ஆனால் அவர் இஞ்சத்தை தமிழ் மீடியாக்களுக்கு இப்பவும் இங்கிலிஷ்லதான் கூடுதலா அறிக்கையள், கடிதங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார். ஒரு சிங்கள எம்.பி. தன்ர அறிக்கை தமிழ் மீடியாக்களில வரவேணும் எண்டதுக்காக இங்கிலிஷ்ல அதுகளை அனுப்பிறதை ஏற்றுக்கொள்ளலாம். அவங்கள் கூட மூண்டு மொழியிலயும்தான் அனுப்புறாங்கள். ஆனால் எங்கட முன்னாள் முதலமைச்சர், வடக்கில உள்ள தமிழ் ஊடகங்களுக்கே இங்கிலிஷ்ல தான் அறிக்கை அனுப்புவன் எண்டு அடம்பிடிக்கிறார். இப்பிடியானவை இருக்கும் மட்டும் தமிழ் நல்லாத்தான் வாழும் பாருங்கோ!

- பசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ட்ரம்பின் செல்வாக்கு வழக்கால் உயர்வு

## ஆச்சரியத்தில் அரசியல் ஆய்வாளர்கள்

வொஷிங்டன், ஏப். 19

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டதன் பிற்பாடு அவரது செல்வாக்கு உயர்கிறது என அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ள ட்ரம்ப் தேர்தல் பரப்புரை செலவுகளுக்காக கடந்த சில மாதங்களாக நிதி திரட்டி வருகிறார். கடந்த 4ஆம் திகதி நியூயோர்க் நீதிமன்றில் ஆபாச நடிகைக்கு பணம் கொடுத்த விவகாரத்தில் ட்ரம்ப் கைதுசெய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்தநிலையில் அவரின் செல்வாக்கு சரிவதற்கு பதிலாக வெகுவாக அதிகரித்துள்ளது.

ட்ரம்ப் திரட்டி வந்த நிதி இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் ஒரு கோடியே 44 லட்சம் டொலர் திரட்டியிருந்த நிலையில் வழக்குப் பதிவின் பின்னரான 24 மணிநேரத்தில் 40 லட்சம் டொலர் நன்கொடை குவிந்துள்ளது.

இது அரசியல் பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது. (ச-இ)

# ஓய்வு வயது 64

## எதிர்ப்புகளை மீறி பிரான்ஸில் சட்டம் நடைமுறை



பாரிஸ், ஏப். 19

பிரான்ஸில் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 62 இலிருந்து 64 ஆக உயர்த்தும் சட்டம் மக்களின் போராட்டங்களையும் மீறி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 62ல் இருந்து 64 ஆக உயர்த்த அதிபர் இம்மானுவேல் மக்ரோன் முடிவு செய்தார். இதற்காக ஓய்வூதிய சீர்திருத்தச் சட்டவரைவை கொண்டு வந்தார்.

இந்தச் சட்டவரைவுக்கு மக்கள், எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. ஓய்வு வயது அதிகரிப்பை திரும்பப் பெறக் கோரி நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன.

ஆயினும் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சட்டமாக்கும் நடவடிக்கையை அதிபர் மக்ரோன் மேற்கொண்டார்.

அதனால் பரிஸ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் போராட்டம் தீவிரம் அடைந்து ஆயிரக்கணக்கானோர் திரண்டு தொடர் போராட்டங்களை நடத்தினர்.

அதேவேளை பிரான்ஸ் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இந்தநிலையில் நீதிமன்று இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ள நிலையில் ஓய்வு வயதை 64 ஆக உயர்த்தும் சட்டத்தை பிரான்ஸ் அரசு வர்த்தமானி வெளியிட்டு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதனால் போராட்டக்காரர்கள் ஆத்திரமடைந்து போராட்டங்கள் தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நாடுமுழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என அந்தநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# 10,000 எழுத்துகளில் ருவிற்றரில் 'ருவீற்'

வொஷிங்டன், ஏப். 19

ருவிற்றர் தளத்தில் இனி ருவீட் ஒன்றுக்கு அதிகபட்சமாக 10 ஆயிரம் எழுத்துக்கள் பயன்படுத்தும் புதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என ருவிற்றர் நிறுவனம் அறிவித்துள்ளது.

உலக பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க் கடந்த ஆண்டு ருவிற்றர் நிறுவனத்தை வாங்கினார்.

ருவிற்றரின் லோகோவை மாற்றியது உள்ளிட்ட பல புதுமைகளை கடந்த சில மாதங்களாக எலான் மஸ்க் ருவிற்றரில் செய்து வருகிறார். இந்த நிலையில் ஒரு ருவிற் ஒன்றுக்கு அதிகபட்சமாக 10,000 எழுத்துக்கள் வரை பயன்படுத்தும் புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதில் 'BOLD' மற்றும் 'italic' வடிவங்களில் ருவிற்களின் எழுத்துகளை அமைக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதிகள் ருவிற்றர் புளூ டிக் பெற்றவர்களுக்கு மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




சூடான், ஏப். 19

சூடான் நாட்டில் இராணுவத்துக்கும் துணை இராணுவப் படைக்கும் இடையே வலுக்கும் மோதல் காரணமாக இதுவரை 185 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து 800 பேர் காயமடைந்துள்ளனர். வடக்கு ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அதற்கு எதிராக பல்வேறு கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனால் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படையினருக்கும் இடையே சண்டை மூண்டது. பின்னர் நாடுமுழுவதும் பெரும் கலவரம் வெடித்தது. நாடு முழுவதும் துப்பாக்கிச்சூடு, குண்டு வீச்சு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றன.

இதனால் கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்ளது. அத்துடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே சூடானில் நடந்து வரும் வன்முறையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை காட்டும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அதேவேளை ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரஸ், சூடானில் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் அமைதிப் பாதைக்குத் திரும்பவேண்டும். மோதல் போக்கை ஊக்குவித்தால் அது நாட்டுக்கும் அந்தப் பிராந்தியத்துக்கும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளார். (ச-இ)

# இன்றைய நாள்

## (ராசிபலன்)





**மேடம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.



**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவிகிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.



**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். உணவு விஷயத்தில் கவனம் தேவை.



**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.



**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும்.



**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கலகலப்பான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் நிறைவேறும்.



**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.



**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற் கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படும்.



**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.



**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும்.



**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அன்னையின் பாதையில்....

தன் இனத்துக்காக உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு இதேநாளில் உயிர்த் தியாகம் செய்தார் அன்னை பூபதி. அந்தத் தியாகத்தாயின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று தாயகத்திலும், புலம்பெயர்ந்து தமிழர் வாழும் நாடுகளிலும் உணர்வுடன் கடைப்பிடிக்கப் படுகின்றது. இந்திய இராணுவத்தினர் அமைதிப் படை என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட காலப்பகுதி அது. 1988ஆம் ஆண்டு உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வு காணவேண்டும் என்று இந்தியாவிடம் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரம் மட்டும் அருந்தி 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார் அன்னை பூபதி. அன்னை பூபதியின் அகிம்சைப் போராட்டத்தை பாரத நாடு கண்டுகொள்ளாத நிலையில், 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி தன்னுயிரை அவர் தமிழினத்துக்காக ஆகுதியாக்கினார்.

அன்னை பூபதி பாரத நாட்டுக்கு எதிராக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தபோது, அவரின் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும் கைதுசெய்து அன்னை பூபதியை மிரட்டிப் பார்த்தது இந்திய இராணுவம். ஆனால், அவை எவற்றுக்கும் கலங்கிவிடாது தான் கொண்ட கொள்கையில் இறுதிவரையில் இறுக்கமாக இருந்து தன் உயிரை இனத்துக்காக ஈந்தார் அவர். அதனாலேயே அன்னை பூபதி இன்றளவும் தமிழ் மக்களின் மனங்களில் வாழ்கின்றார். அன்னை பூபதி உயிர்த் தியாகம் செய்து 35 ஆண்டுகள் கடந்துள்ளபோதும், தமிழ் மக்கள் இன்னமும் தங்கள் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டே இருக்கின்றார்கள். தமிழ் மக்களின் நம்பிக்கையாகவும் அரணாகவும் இருந்த ஆயுதப் போராட்டம் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் மௌனிக்கப்பட்ட பின்னர்தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் அதிதீவிரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களின் இருப்பைச் சிதைக்கும் முயற்சிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பேரினவாத அரசாங்கங்களால் திட்டமிட்டு தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

பேரினவாத அரசாங்கங்களின் இந்தத் திட்டமிட்ட சிங்களமயமாக்கலைக் கட்டுப்படுத்தவோ, தடுத்து நிறுத்தவோ வழிவகை தெரியாதிருக்கின்றன தமிழ் மக்களின் தற்போதைய தலைமைகள். பேரினவாத அரசாங்கங்களின் இந்த சிங்களமயமாக்கும் முயற்சிகளுக்கு எதிராகத் தமிழர் தரப்புத் தலைமைகளால் போராட்டங்களும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டாலும் அவை எவரின் காதுகளையும் தட்டுவதாக இல்லை. அவ்வாறான போராட்டங்களைத் தமிழ்த் தலைமைகளிடம் எழுச்சியோடும், மக்கள் பங்களிப்போடும் செய்வதற்கான ஆளுமையும் தமிழ்த் தலைமைகளிடம் இல்லை என்பது வேதனைக்குரிய உண்மை. இந்த நிலைமைக்கு தமிழ்த் தலைமைகளின் சுயநலம் சார்ந்த அரசியல் போக்கும், அதனால் அவர்கள் மீது மக் களுக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையீனமும் காரணங்கள் என்பதும் நிதர்சனம்.

அன்னை பூபதியிடம் இருந்த இனம் மீதான பிடிப்பும், தான் கொண்ட கொள்கையை இறுதிவரை கைவிடா மன உறுதியுமே இப்போது தமிழ் இனத்துக்குத் தேவை – தமிழ்த் தலைமைகளுக்குத் தேவை. அன்னை பூபதியை நினைவேந்தும் இந்த நாளில் நாம் அதை மனதில் இருத்துவோம். தமிழ் மக்களின் விடிவுக்கான பாதையில் ஒன்றிணைந்து பயணிப்போம்.

நாளொரு நல்வார்த்தை

“உங்கள் நேரத்துக்கு ஒருவரையறை உண்டு. ஒவ்வொரு கணத்தையும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள்” – மார்கஸ் அரேலியஸ்



# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் மக்களைப் பாதுகாக்குமாம்!

## நீதி அமைச்சர் கூறுகின்றார்



**கொழும்பு, ஏப்.19**

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் மக்களை அடிப்படையாகக் கொண்டது, முற்போக்கானது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது இலங்கையின் பல முன்னணி சட்டத்தரணிகளின் ஆலோசனைகளை உள்வாங்கி பொது மக்களை பாதுகாப்பதற்காகவே இந்தச் சட்ட வரைவு உருவாக்கப்பட்டுள்ளது.

உலகின் ஏனைய நாடுகளில் காணப்படும் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பலவற்றை உத்தேச சட்டம் நீக்குகின்றது. பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளே உத்தேச சட்டத்தில் காணப்படுகின்றன. எதிர்கால அரசாங்கங்களை வலுப்படுத்தும் நோக்கத்தில் எந்த ஏற்பாடுகளும் உத்தேச சட்டத்தில் இல்லை - என்றார். (எ-இ)

## வீடு செல்லாத நோயாளரால் மருத்துவமனையில் நெருக்கடி

கொழும்பு தேசிய மருத்துவமனையில் பாதுகாவலர்கள் இன்றி அதிகளவான நோயாளர்கள் தங்கியிருப்பதால், நாளாந்த மருத்துவமனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. தினமும் சுமார் ஐந்து பேர் குணமடைந்த பின்னரும் மருத்துவமனையில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால், மருத்துவமனை நிர்வாகத்தால் மேலதிக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லென தெரிவித்தார்.

அம்புலன்ஸ் வண்டியின் ஊடாக பலர் சிகிச்சைகளுக்காக அழைத்து வரப்படுகின்றனர். அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்திருப்பினும், பொறுப்பேற்க எவரும் வருவதில்லை. அவர்களில் பெரும்பாலானோர் வயோதிபர்களாவர். குணமடைந்த சிலருக்கு வீடு செல்வதற்கான வழி தெரியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## டி லிவேராவுக்கு அழைப்பு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக இன்று பயங்கரவாத விசாரணைப் பிரிவில் முன்னிலையாகவேண்டும் என்று முன்னாள் சட்டமா அதிபர் டப்புல டி லிவேராவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக முன்னிலையாக வேண்டும் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியிலுள்ள சதி முயற்சி தொடர்பாக முன்னாள் சட்டமா அதிபர் வாக்குமூலம் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

நாளை

20.04.2023
வியாழக்கிழமை
சித்திரை 07

சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 01.32 - 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பர் – பேருந்து பயங்கர விபத்து ஒருவர் உயிரிழப்பு: பலர் படுகாயம்!



கிளிநொச்சி, ஏப். 19

அரச பேருந்தும், டிப்பர் வாகனமும் தம்புல கோமாகவ என்னுமிடத்தில் நேற்று நள்ளிரவு 11.30 மணியளவில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழ்ந்தார்.

உயிரிழந்தவர் டிப்பர் வாகனத்தின் சாரதி என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 8 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினார்கள் (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்போது உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள்) என்றும் அவர்களின் பலர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# அமைச்சரவையில் மாற்றமா? அப்படியொரு எண்ணமே இல்லை

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 19

அமைச்சரவை விஸ்தரிக்கப்படவுள்ளது. புதியவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று வெளியாகும் செய்திகளில் உண்மைத்தன்மை இல்லை. அமைச்சரவையை மாற்ற வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு தற்போது ஏற்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று வெளியாகும் தகவல்களில் உண்மைத்தன்மை இல்லை. இவ்வாறான வதந்திகள் குறித்து அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லை. அமைச்சரவை நியமனமொன்று வழங்கப்படுமானால் அது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டுக்கு அறிவிக்கப்படும். அதற்கமைய புதிய நியமனங்களை வழங்குவதற்கும், அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் ஜனாதிபதிக்கும் அதிகாரம் காணப்படுகிறது. இந்த அதிகாரத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை – என்றார். (அ-ம)

சீனாவுக்கு

# குரங்குகளுக்குப் பதிலாக அரசியல்வாதிகளை வழங்குக

## சுற்றாடல்துறை நிபுணர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 19

குரங்குகளுக்குப் பதிலாக, நாட்டை நாசம் செய்த அரசியல்வாதிகளை விஞ்ஞான ஆய்வுகளுக்காக ஏற்றுமதி செய்யவேண்டும். அரசியல்வாதிகளின் மூளையை உணவுக்குப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் அவர்களுக்கு மூளை கிடையாது என சுற்றாடல்துறை நிபுணர் நயனக ரன்வெல்ல அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயப் பயிர்களுக்கு குரங்குகளால் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே அதைக் கட்டுப்படுத்த ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சீனாவில் உள்ள மிருக காட்சிசாலைக்கு குரங்குகளை வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்குவதால் விவசாயப் பயிர்களுக்கு காட்டு விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியாது. வன விலங்குகளின் வாழ்விட சூழல் அழிக்கப்படும் போது விலங்குகள் மனித நடவடிக்கைக்கு எதிராக செயற்படும். வனவிலங்குகளின் வாழ்விடத்தை பாதுகாக்க அரசாங்கம் கொள்கை அடிப்படையில் உறுதியான திட்டங்களை வகுக்கவேண்டும்.

ஒரு இலட்சம் குரங்குகள் உண்மையில் சீனாவில் உள்ள மிருகக்காட்சி சாலைக்குத்தான் வழங்கப்படுகிறதா என்பதில் சந்தேகம் காணப்படுகிறது. சீனாவில் குரங்கு மூளையைக் கொண்டு சமைக்கும் உணவு பிரபல்யமானது. உணவு உற்பத்திகளுக்காக குரங்குகள் கோரப்படலாம். விஞ்ஞான ஆய்வு நடவடிக்கைகளின் இறுதிப் பரிசோதனைகள் குரங்குகளைக் கொண்டு முன்னெடுக்கப்படும். மூன்றாம் தலைமுறை ஆய்வுகளுக்கு குரங்குகள் பயன்படுத்தப்படும். மனிதனுக்கும் குரங்குகளுக்கும் அறிவியல் ரீதியில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. ஆகவே விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்காக குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்ற சந்தேகம் எழுவதும் தவிர்க்க முடியாமலுள்ளது.

குரங்குகளுக்குப் பதிலாக நாட்டை நாசம் செய்த அரசியல்வாதிகளை ஏற்றுமதி செய்ய வேண்டும். அரசியல்வாதிகளின் மூளைகளை உணவுக்காகப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் அரசியல்வாதிகளுக்கு மூளை என்பதொன்று கிடையாது. அரசியல்வாதிகளை விஞ்ஞான ஆய்வுகளுக்காகப் பயன்படுத்தினால் நாட்டுக்கு ஏதும் பயன் கிடைக்கும் – என்றார். (அ-ம)


# மரண அறிவித்தல்



## கந்தையா தவமணி

மாவிட்டபுரம், பளை, வீமன்காமத்தினை பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவமணி கடந்த (17.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஏகாம்பரத்தின் அன்புச் சகோதரியும், புஸ்பகலா, விக்னேஸ்வரன் (நோர்வே), உமாசுதன் (லண்டன்), உமாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தங்கவேல், அஜந்தா (நோர்வே), திலகவதனா (லண்டன்), சிவமரீனா ஆகியோரின் அன்பு மாமியாரும், வசீவன் (பொலிஸ் உத்தியோகஸ்தர்), டுபேந்திரன் (நோர்வே), புனிதரூபன், றொசாந் (பொறியியலாளர்), தவநீதன் (பல்கலைக்கழக பொறியியல் பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர), லக்ஷிகா (நோர்வே), தீவாரகா (நோர்வே), லக்ஷனா (நோர்வே), தருன் (லண்டன்), அபின் (லண்டன்), ரவின் (லண்டன்), சஸ்மீரா, திவியா, காவேரி, தர்ஷிகா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிஷ்வின், சங்கீத், சஷ்வின் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் இன்று (19.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று, பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்.
க.உமாகரன் (077 6163 319)

(CS 24524) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு." -வள்ளுவர்



## எட்டயபுரத்துக் கவியும் குழந்தைப் பாடல்களும்

பத்மா இளங்கோவன்

**ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா...** என்று குழந்தைகளைக் குழந்தைகளாகவே கண்டு மகிழ்ந்தவர் பாரதியார். குழந்தைகள் உள்ளத்தில் புகுந்து அவர்கள் விருப்பு வெறுப்புக்களைப் படித்து, அவர்கள் வாழ்வு வளம் பெற, அழகாக இலக்கியத்தைப் படைப்பவர்களே குழந்தை இலக்கிய கர்த்தாக்கள். இதில் வெற்றி கண்டவர் எங்கள் எட்டயபுர மக்கள் கவிஞர் சுப்ரமணிய பாரதியார் என்றால் அது மிகையாகாது.

நாடு அந்நியர் ஆட்சியில் அடிமை இருளில் மூழ்கியிருந்த சமயம் 1882ஆம் ஆண்டு சுதந்திர தாகம் கொண்ட வீரபுருஷராக வந்துதித்து விடுதலை வேள்வியைத் தன் கவிதைத் தீயால் சுடரேற்றியவரே வீரக் கவிஞர் மகாகவி பாரதியாவார்.

விடுதலை என்பது அச்சமற்ற, அடுத்தவரைப் பாதிக்காத சுதந்திர வாழ்க்கை என்பதை உறுதியாகக் கொண்டவர் மகாகவி. எனவே தன் நாட்டைக் காத்திட ஒரு வீரமுள்ள சமுதாயம் மலரவேண்டும் எனத் திடமாக நம்பினார். அந்தக் கனவை நனவாக்க குழந்தைகளிடம் வீர உணர்வை வளர்ப்பதுதான் முதற்படி என்பதை உணர்ந்தார். எனவே குழந்தைகளை விழித்து அதற்கான பாடல்களைப் பாடினார். ஓடி ஆடி விளையாட குழந்தைகளை அழைத்தார். விளையாட்டின் மூலம் அறிவு மிக்க வீர உணர்வூட்டும் பாடல்களைக் குழந்தைகளுக்குக் கொடுத்தார்.

எளிய, சிறிய அடிகளில் அமைந்த பாரதியின் இனிய பாடல் வரிகள் குழந்தைகளைக் கவர்ந்ததில் வியப்பில்லை. அவைகள் எளிதாக குழந்தைகளின் மனதில் பதிந்தன. அவர்கள் நாவில் நடனமிட்டன.

**ஓடி விளையாடு பாப்பா நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா..'** எனக் குழந்தைகளைப் பார்த்து அழகாகப் பாடும் பாரதி,

**காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு**
**கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு**
**மாலை முழுதும் விளையாட்டு என்று**
**வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா..'**
என்றவாறு குழந்தைகளின் நாளாந்த கடமைகளைப் பட்டியலிட்டுக் காட்டி நல்ல பழக்கவழக்கங்களை இலகுவாகப் புகுத்த முனைகிறார்.

நாட்டு விடுதலைக்கான துணிச்சல் மிக்க குழந்தைகளை வளர்த்தெடுத்து, நெஞ்சுரம் மிக்க சமுதாயத்தை உருவாக்க விரும்பிய பாரதி புதிய ஆத்திசூடியைப் படைத்துக் காட்டுகிறார்.

**அச்சம் தவிர் ஆண்மை தவறேல்**
**இளைத்தல் இகழ்ச்சி...'**

என்றும்
**குன்றென நிமிர்ந்து நில்**
**நேர்படப் பேசு**
**ஏறு போல் நட'**
**என்றும் பாடிய பாரதி,**
**புதியன விரும்பு**
**மானம் போற்று**
**நன்று கருது**
**ஓய்தல் ஒழி'** - என்கிறார்.

### எளிமையான கவித்துவம்

இரு சொற்களில் பெருநெறிகளை இலகுவாகப் புரியவைக்கும் பாரதியின் கவித்துவ எளிமை வியப்புக்குரியது.

**உடலினை உறுதி செய்**
**ஊன்மிக விரும்பு**
**வருவதை மகிழ்ந்துண்**
**வீரியம் பெருக்கு**
**நீதி தவறேல்'**
என அழகான புத்திமதிகளை குழந்தைகளுக்கு ஒரு தாயாக, தந்தையாக, குருவாக நின்று பாரதி போதிக்கும் அழகே தனிதான்.

இவ்வாறு விடுதலை வேட்கை மிக்க, சமத்துவ சமுதாயத்தைக் குழந்தைகளிடமிருந்தே வளர்த்தெடுக்க விரும்பிய பாரதி தன் குழந்தைப் பாடல்களில், புதிய ஆத்திசூடியில் இதற்கான யுக்திகளைக் கையாளுகிறார். உடல், உள ஆரோக்கியமுள்ள, திடகாத்திரமுள்ள, செயற்றிறன்மிக்க குழந்தைகளைக் காண முயல்கிறார் என்பது இங்கே தெளிவு.

பாரதியின் கனவுகளான தேச விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, மூடநம்பிக்கைகளைத் தகர்த்தல், பெண் விடுதலை போன்ற நடவடிக்கைகள் மூலம் சமத்துவ சகோதரத்துவ சமுதாயத்தைக் காணவிரும்பினார். இதற்கு உந்துசக்தியாக தன் பாட்டை ஆயுதமாக்கி ஆதரவு திரட்டினார். விடுதலைத் தாகமுள்ள பாடல்களைப் பாடினார். சமுதாயக் கொடுமைகளைக் குழந்தைகள் மனதில் பதியும்படி இலகுவாகச் சுட்டிக் காட்டினார்.

**சாதிகள் இல்லையடி பாப்பா குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்** - என்றார்.

**பாதகஞ் செய்பவரைக் கண்டால்**
**மோதி மிதித்துவிடு பாப்பா அவர்**
**முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா'** என்று கொடுமைகளைக் கண்டு அஞ்சாது போராடி வெற்றிகொள் எனக் குழந்தைகள் நெஞ்சில் உரமேற்றுகிறார்.

இன்று நவீன சமூகத் தொடர்புச் சாதனங்கள் கைத்தொலைபேசி, கணினி, மின்னியல் விளையாட்டுச் சாதனங்களுடன் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருதாது பெற்றோரும் நவீன சமூகத் தொடர்பு சாதனங்களுடன் மூழ்கிக் கிடக்கும் அவலநிலை கவலைக்குரியது.

தீர்க்க தரிசனக் கவிஞனான பாரதி இந்நிலையை அன்றே உணர்ந்தது போல...

**சிட்டுக் குருவியைப் போலே நீ**
**திரிந்து பறந்து வா பாப்பா**

**வண்ணப் பறவைகளைக் கண்டு**
**மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா..!** எனக் குழந்தைகளை வீட்டுச் சூழலில் உள்ள பறவைகள் பிராணிகளிடம் அன்பாக உறவாடி, விளையாடி மகிழும்படி கேட்கிறார்.

**கொத்தித் திரியும் அந்தக் கோழி அதைக்**
**கூட்டி விளையாடு பாப்பா**
**எத்தித் திருடும் அந்தக் காக்கை அதற்கு**
**இரக்கப்பட வேணுமடி பாப்பா..** - என்கிறார்.

**பாலைப் பொழிந்து தரும் பாப்பா அந்தப்**
**பசுமிக நல்லதடி பாப்பா**
**வாலைக் குழைத்து வரும் நாய்தான் அது**
**மனிதனுக்குத் தோழனடி பாப்பா..!'**
என்றும்,
**வண்டி இழுக்கும் நல்ல குதிரை நெல்லு**
**வயலில் உழுது வரும் மாடு**
**அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு இவை**
**ஆதரிக்க வேணுமடி பாப்பா...** என்கிறார் மகாகவி.

நம்மைச் சுற்றிலும் உள்ள பறவைகள் மிருகங்களின் குணாதிசயங்கள், பயன் பாடுகளைக் கூறி, அவற்றோடு அன்பாக ஆதரவாக தோழமை உணர்வோடு பழகி, உயிர்களை நேசிக்கும் பண்பை வளர்க்க வேண்டும் என்பதை குழந்தைகளுக்குப் புரியவைக்க முயல்கிறார் கவிஞர்.

**பொய் சொல்லக் கூடாது பாப்பா என்றும்**
**புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா**
**சோம்பல் மிகக் கெடுதி பாப்பா தாய்**
**சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா...'**
என்றும்
குழந்தைகள் வளரும்போது நல்ல பழக்கவழக்கங்களைக் கற்று வளர வேண்டும் என குழந்தைகளை நோக்கி அன்பாக வேண்டுகிறார் மகாகவி.

**அமிழ்தில் இனியதடி பாப்பா நம்**
**ஆன்றோர்கள் தேசமடி பாப்பா**
**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத்**
**தொழுது படித்திடி பாப்பா...'** எனக் குழந்தைகளுக்குத் தாய்நாட்டுப் பற்றையும், தாய்மொழிப் பற்றையும் தம் பாப்பாப் பாடல் மூலம் கனிவுடனே ஊட்டும் பெருமை மிக்க குழந்தைக் கவிஞர் மகாகவி பாரதியை யாரால் மறக்க முடியும்.

பாரதி குழந்தைகளுக்காகப் பாடியவை அதிகம். அத்தனையும் ரசிக்கத்தக்கவை. சிந்திக்கவைப்பவை. பிள்ளைகளின் குறும்புகளைக் கனியமுதாக ரசித்துச் சுவைத்துத் தந்த பாடல்கள் மறக்கமுடியாதவை.

மேலும் பன்முகத்திறன் படைத்த அவர் கவிஞராக, பத்திரிகையாளராக, இதழாசிரியராக, ஆசிரியராக, விடுதலை வீரராக, குழந்தை இலக்கிய கர்த்தாவாக இருந்ததோடு, தேசிய விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு தன்பங்களிப்பை சமுதாய விடிவுக்காய் அள்ளித்தந்த பெரும் தியாக வீரருமாவார்.

தன் நாட்டுக்காகவும் மக்களுக்காகவுமே சிந்தித்த பாரதி 1921ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தன் சிந்தனையை நிறுத்திக்கொண்டார்.

பாரதி கண்ணாரக் கண்டு மகிழ்ந்த 'பேசும் பொற் சித்திரங்களான' குழந்தைகளுக்காக அள்ளித் தந்த பொக்கிஷத்தை, குழந்தை இலக்கியத்தை, குழந்தைப் பாடல்களைப் போற்றிக் காத்துப் பயனடைந்து கொள்வதே என்றும் 'மகாகவி பாரதிக்கு' நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 05.01.1952 | இறப்பு 18.04.2023

## கனகசுந்தரம் வெற்றிவேல்

(முன்னாள் எழுதுவினைஞர், மில்க்வைற்சோப் தொழிற்சாலை, சோதிடர்)

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் வெற்றிவேல் நேற்று (18.04.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் - கணேஸ்வரி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - இரத்தினம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற பிறேமா அவர்களின் அன்புக் கணவரும், தயாளினியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட சித்த வைத்தியசாலை) அன்புத் தந்தையும், கேதனனின் (விரிவுரையாளர் - ATI யாழ்ப்பாணம்) அன்பு மாமனாரும், சக்தியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருமதி சுந்தரவதனா தர்மலிங்கம் மற்றும் ஜெயசுந்தரம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திராணி பாலசுப்பிரமணியம், மகேஸ்வரமூர்த்தி, கெங்காதரன், காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் அசோகவதி, பாலச்சந்திரன், குகநேசன், ரஞ்சன், தர்மலிங்கம், உதயா, ரஞ்சினிதேவி ஆகியோரின அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

M. கேதனன்
077 1000 758, 021 224 5052

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 30 - 05 - 1942 | மறைவு 17 - 04 - 2023

## தம்பிராசா நாகேஸ்வரி

வட்டுக்கோட்டை சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா நாகேஸ்வரி நேற்றுமுன்தினம் (17.04.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா, விசாலாட்சி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற அருளானந்தம் (ரைக்ரர் பெரியண்ணை), சிவராசா (சின்னண்ணை- யாழ்ப்பாணம் கந்த வேலன் றேடர்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதாசன் (சிவன்- சுவிஸ்லாந்து), சண்முகேஸ் (பசளைத் தொழிற்சாலை- சிலாபம்), கௌரிஸ்னி (குப்பிழான்), சியாமினன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- தெல்லிப்பளை பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், நித்தியஸ்ரீயின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2023) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை,
பத்திரகாளி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
தம்பிராசா
(சகோதரர்)

# ஈர விழிகளோடு வதங்கிய இதயத்திலிருந்து சொரியும் 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 27 . 06 . 2003 | இறைவனின் இல்லத்தில் 18 . 04 . 2008

## அமரர் இந்துஜா விஜயகுமார்

அன்பின் உறைவிடமே! அழகின் திரு விடமே
மழலை மொழி சொரிந்த மகளே இந்துஜா!
நீ எம்மை விட்டு இறைவன் இல்லம் அடைந்து
15 ஆண்டுகள் உருண்டோடினாலும்
என்றும் உன் நினைவாய் சுழன்று வெதும்புகின்றோம்

அம்மா, அப்பா, தம்பி (இந்துஜன்)
மற்றும் குடும்பத்தினர்.
கொம்மந்தறை, வல்வட்டித்துறை.

(CS)24493)AH

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 . 01 . 1936 | மறைவு 29 . 04 . 2022

## அமரர் சந்திரசேகரர் கணபதிப்பிள்ளை (K.S.K)

ஓய்வுநிலை உத்தியோகத்தர்- சுகாதாரத் திணைக்களம்,
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் - முன்னாள் உப தலைவர்
கைதடி கிழக்கு சனசமூக நிலைய- முன்னாள் போசகர்)

எங்கள் தெய்வம் எம்மை விட்டு பிரிந்து சென்று ஆண்டு
ஒன்று ஆனது இன்றுடன் ..............!!!
நாட்கள் பட்டம் போல் பறந்து சென்றாலும் எமது நெஞ்சில் எப்போதும்
சுயநினைவு உள்ளவரை உங்கள் நினைவு கல்லில் செதுக்கிய
சிற்பம்போல் என்றும் அழியாது....!!!
எமக்கு எல்லாம் தலைவராக நின்று எம்மை
நல்வழிப்படுத்தி வழிநடத்திய தெய்வமே-
இன்று நீங்கள் இல்லாது நாங்கள் இங்கு தவியாக தவிக்கின்றோம்.
நீங்கள் நடத்த வேண்டும் என நினைத்த உங்கள் அருமை பேரனின்
நற் காரியங்கள் இனிமையாக கைகூட ஏன் எம்மை பாதி வழியில்
தவிக்கவிட்டு சென்றது ஏனோ?
அனுதினமும் மனம் வாடி வாடி வெம்புகின்றோம்.
எங்கள் தெய்வமே...!!!
எம்மை இங்கு விட்டு நீங்கள் எங்கு தனியாக சென்று விட்டீர்கள்....
அன்று இரவு நீங்கள் நெஞ்சு வலிக்குது என கூறியதும்
உங்கள் அருமை ஆசைப் பேரன் உங்களை வைத்தியசாலைக்கு
கொண்டு செல்வதற்காக அன்புலன்ஸ் வண்டியையும்
வீட்டு வாசலடி மட்டும் அழைத்து வர நீங்கள்
ஓர் இரு வினாடிகளில் எல்லோரையும் விட்டு
அதுவும் ஆசை பேரனை தவிக்கவிட்டு சென்றதேனோ?
அந்த காலனுக்கும் கண் இல்லை போலும்....!!!
உங்கள் அருமை மகளும் ஆசைப் பேரனும் அன்பு மருமகனும்,
பாச தம்பியும் மற்றும் உற்றார், உறவினர்களும் நண்பர்கள்
பரிதவித்து தனித்திருக்க எங்களை விட்டு
தனியே திடீரென சென்றது ஏனோ...!!!

உங்களின் புனித ஆத்மா எல்லாம் வல்ல கைதடி வீரகத்தி விநாயகர் மற்றும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் திருப்பாதங்களில் சாந்தி அடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எமக்கு எல்லாம் இறைவனை போன்று நின்று எம்மை வழிநடத்த வேண்டும் என் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இப் புனித மடலை கண்ணீருடன் நிறைவு செய்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

ஆசை பேரன்:- லோ.சிவசெல்வன் (செல்வா)
அருமை மகள்:- லோ.உமாதேவி
அன்பு மருமகன் :- அ.லோகநாதன்
பாச தம்பி:- க.ச.சிவசுப்பிரமணியம்
(மணியம் - கனடா)

"செல்வபதி"
[illegible],
கைதடி.
077 051 4632
077 746 4889

(CS 24522) A-1

## சீரணி அம்பாள் கொடியேற்றம் இன்று

யாழ்., ஏப்.19

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாக பூஷணி அம்பாளின் சோபகிருது வருட மஹோற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

18 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவப் பெருவிழாவில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும், நடைபெறும் என்று ஆலயத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (எ-66)

## வாள்வெட்டு நடத்தி கொள்ளை சந்தேகநபர் சிக்கினார்

வவுனியா, ஏப். 19

வவுனியாவில் கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட இருவர் மீது வாள்வெட்டுத்தாக்குதல் நடத்தி கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினத்தன்று பூவரசன்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த கர்ப்பிணிப் பெண் மற்றும் அவரது தாயார் இருவரையும் பம்பைமடுப் பகுதியில் வைத்து கொள்ளையர்கள் வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி அவர்கள் அணிந்திருந்த 6 அரைப் பவுண் நகை மற்றும் ஒன்றரை லட்சம் ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 29.03.1971

## இராஜதுரை றமணன்

மறைவு 16.04.2023



யாழ்.வேலணை மேற்கு, சிற்பனை முருகன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டன், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டு மீண்டும் வேலணை மேற்கை வதிவிடமாகக் கொண்ட இராஜதுரை றமணன் கடந்த (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை - வரதலட்சுமி (ராசு) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவபரமானந்தன் - மகேஸ்வரி (ராஜி) தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபித்தா (வவா) வின் அன்புக் கணவரும், ஜனோஷ், பிரனோஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், இராஜேஸ்வரி (ராதா), இரவீந்திரி (றதிகா), ராகுலன், றஜனி, றமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நவரஞ்சன் (ரஞ்சன்), மகேஸ்வரன், பாலகுமார், சரவணன், சுஜாதா, காலஞ்சென்ற ரமணன் மற்றும் சுகிர்தா, குமரன், ஜனகன், வித்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவளவேலாயுதன் (தேவன்), லோகேந்திரராஜா (இந்திரன்), ஹனுசிகா, சியாமினி, திலீப் ஜீவகுமார் ஆகியோரின் அன்புச் சகலனும், ஜெசி, ஆகாஷ், டினேஷ், சஜி, சர்மிகா, சாயினி, சஜிவ், அக்ஷயா, அசான், ரமணன், மித்ரா, ஆரபி, ஆரணி ஆகியோரின் பாசமிகு மாமாவும், லதுஷன், நிலோஜன், தனுஷ், ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், ரியா, காவ்யா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் சிற்பனை வீதி, வேலணையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**077 483 0679**

(CS/50077)AH-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 28.02.1964

இறப்பு 16.04.2023

## செல்லத்துரை சுந்தரலிங்கம்

**(உரிமையாளர் - முன்னாள் மாங்குளம் சுந்தரம் ஸ்ரோர்ஸ்)**



புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மாங்குளம் மற்றும் வவுனியா, இல.09, 01ம் ஒழுங்கை, கல்வியற் கல்லூரி வீதி, மகாறம்பைக் குளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுந்தரலிங்கம் கடந்த (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - கண்ணம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - புஸ்பமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், லலிதாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மபாலன், பாக்கியலட்சுமி, யோகலட்சுமி, தனலட்சுமி, ராசன் மற்றும் ஜெயலட்சுமி (மகாறம்பைக் குளம் - வவுனியா) ஆகியோரின் அருமைச் சகோதரனும், சுதர்சன், சுகந்தன், முகுந்தன், மகிந்தன், ஜீவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தீபா, அருந்துகி, சங்கீதா ஆகியோரின் அருமை மாமனாரும், ஈழன், நிலன், எழிலன், ஆதன், ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேரனும், கோபாலகிருஷ்ணன், குணபூபதி, ரதிதேவி, ரஞ்சினிதேவி, சீதாதேவி, கெங்காதேவி, காலஞ்சென்ற சரோசாதேவி, கணேசராசன், வேலுப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ராசாத்தி, கனகலிங்கம், துரைசிங்கம், கனகசிங்கம், மாணிக்கவாசகர், ரவிகாந்தன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2023) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகாறம்பைக் குளம், வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்**

**024 222 2878**

(CS/ 50067)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்லையாக் குருக்கள் விக்கினேஸ்வரமூர்த்திஐயர்

**(மீசாலை பாலன் ஐயா)**

சாவகச்சேரி வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையாக் குருக்கள் விக்கினேஸ்வர மூர்த்திஐயர் (மீசாலை பாலன் ஐயா) நேற்று (18.04.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாக்குருக்கள் அம்பிகை அம்மாவின் புதல்வனும், உத்தமராணியின் கணவரும், நிருபா - நித்தியானந்த சர்மா, நித்தியா, நிர்மலா வித்தியானந்த சர்மா, நிவேதா ஆகியோரின் தகப்பனும், குமரமூர்த்தி சர்மா, சுதர்சன் சர்மா, தீபன்ராஜ்சர்மா, கர்சன் சர்மா ஆகியோரின் மாமனாரும், மங்களேஸ், மங்களசயானா, மதுரிகா, சக்ரீவன்சர்மா, சாஸ்வதசர்மா, ஶ்ரீதன்வி, காவ்யாஶ்ரீ ஆகியோரின் பேரனும், பரராஜசேகரக்குருக்கள் காலஞ்சென்ற முத்துலிங்கசர்மா, காந்திமதி, தெட்சணாமூர்த்திக்குருக்கள், கருணாகரசர்மா, உருத்திரமூர்த்திசர்மா காலஞ்சென்ற சிவசங்கரசர்மாவின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2023) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று, வேம்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**
**நித்தியானந்த சர்மா)**
**(மகன்)**
**077 5134 399**


# கால்நடைகளுக்கு காது அடையாளம்


## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்

**விஜிதா அகிலன்**

(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

கடந்த (17.04.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.



## Immediate Vacancies

**Technical Officer**

**DCT, NCT or CSS**

Please forward your CV with details to vacancynsc@gmail.com with two non related referees in 7 Days.



**T.P: 0777 120 945**

(CS 24521) A-1



## பெண் சமையலாளர் தேவை

வீடொன்றில் சமையல் வேலை
செய்வதற்குப் பெண் ஒருவர் தேவை.
கோப்பாய் பிரதேசத்துக்கு அண்மையில்
இருப்பவர் விரும்பத்தக்கது.
வேலை நேரம் காலை 7 மணி முதல்
மாலை 5 மணி வரை.
தங்கி நின்று வேலை செய்ய
விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.



**தொடர்பு: 0714115002**


ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாடுகளுக்கு இந்த ஆண்டுக்கான காதடையாளம் இடும் பணி ஊர்காவற்றுறை கால்நடை மருத்துவ அலுவலகத்தால் கிராமஅலுவலர் பிரிவு ரீதியாக இடம்பெறவுள்ளது. இன்று புதன்கிழமை தொடக்கம் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதற்கமைய இன்று புதன்கிழமை அனலைதீவு ஜே/37,38 ஆகிய பிரிவுகளிலும் எதிர்வரும் 26ஆம் திகதி எழுவைதீவு ஜே/ 39 பிரிவிலும் மே மாதம் 17ஆம் திகதி ஊர்காவற்றுறை ஜே/49 மற்றும் பருத்தியடைப்பு ஜே/50 பிரிவுகளி லும் மே 24 இல் கரம்பொன் ஜே/51 மற்றும் கரம்பொன் கிழக்கு ஜே/52 பிரிவுகளிலும், ஜூன் மாதம் 7ஆம் திகதி கரம்பொன் தென்கிழக்கு ஜே/53 மற்றும் கரம்பொன் மேற்கு ஜே/54 பிரிவுகளிலும் ஜூன் 14ஆம் திகதி நாரந்தனை வடக்கு ஜே/55 பிரிவிலும் ஜூன் 21ஆம் திகதி நாரந்தனை தென்மேற்கு ஜே/56 மற்றும் நாரந்தனை ஜே/57 பிரிவிலும் ஜூன் 28ஆம் திகதி நாரந்தனை தெற்கு ஜே/58 பிரிவிலும், ஜூன் 5ஆம் திகதி சுருவில் ஜே/59 பிரிவிலும் ஜூலை 12ஆம் திகதி புளியங்கூடல் ஜே/60 பிரிவிலும் காதடையாளம் இடும் பணிகள் இடம்பெறவுள்ளன.

மேலதிக தினங்கள் ஒதுக்கப்படமாட்டாது என கால்நடை மருத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (ச)


# மரண அறிவித்தல்

## திருமதி தனுசியா யசோதரன்



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனுசியா யசோதரன் அவர்கள் நேற்று (18.04.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் குருபரன் மற்றும் யோகராணியின் அன்பு மகளும், யசோதரனின் அன்பு மனைவியும், பேரம்பலவாணர் வரதலட்சுமியின் பாசமிகு மருமகளும், அபிஷன், ஆயுஷன், அர்விஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனேஸ், கஜன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், வசீகரனின் மைத்துனியும், பாலஜோதி, பிரபாகரன், சிறீகரன், நிரோஜன், நிரோஜா ஆகியோரின் அருமை அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**உடையார் வீதி,**
**வட்டு கிழக்கு, சித்தன்கேணி,**
**076 7898 898**

(CS 24525) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நீர் தினத்தில் ஓர் எச்சரிக்கை!

கே.எஸ்.சிவஞானராஜா

வடமாகாணத்தில் இருந்து 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா வருடா வருடம் குடிதண்ணீருக்காகச் செலவிடப்படுகின்றது. இந்தப் பணம் வடக்கு எல்லை கடந்து கொழும்பு வரை சென்று தென்பகுதியை வாழ்விக்கின்றது. சுத்திகரிக்காமலேயே பருகி மகிழக்கூடிய மிகவும் சுத்தமான தண்ணீர் கிளிநொச்சியின் கண்ணாக அமைந்த இயக்கச்சியிலேயே எமக்குக் கிடைக்கிறது. பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது, அவரது பாவனைக்காகவும், கொழும்பின் உயர்மட்ட பிரமுகர்களின் பாவனைக்காகவும் கிளிநொச்சி இயக்கச்சியிலிருந்தே குடிதண்ணீர் பெரியபெரிய தாங்கிகளிலும், உலங்கு வானூர்திகளிலும் எக்கச்சக்கமாகக் கொண்டு செல்லப்பட்ட வரலாறுகள் எமக்குப் பாடமாக அமைந்த நிலையில், நாமோ தென்னிலங்கையிலிருந்து குடிதண்ணீரை இறக்குமதி செய்து பாவிக்கின்றோம்.

ஒவ்வொரு வருடமும் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவுக்கு கொழும்பு வலுக்கெட்டித்தனமாக வடபுலத்தை வசீகரித்து எம்மிடமிருந்து பண பலத்தைக் கைப்பற்றிக் கொள்கிறது. வடபுலத்திலே நீர் வளமும், நில வளமும், மூளை வளமும், கன குளமும், கடல் வளமும், பனை வளமும், பால் வளமும், கை வளமும் கால் வளமும், உடல் வளமும், உள நலமும், மொழி வளமும், மூத்த தல தீர்த்த அழகும் நிறைந்திருக்கின்றன. ஆனால், கட்டடப் பெருக்கமும், கோபுர நெருக்கமும் தாராளமாகத் தேறியுள்ள நிலையிலே, நிலமும், நீரும், வனமும், வரங்களும் எமக்குத் தெரியாமலேயே நாள்தோறும் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாமோ கல்லும், மணலும், சிமெந்தும், கருங்கல்லும் இருந்தால் கதிரைகளில் வாழலாம் என்ற அதீத அபார அசாத்தியத் துணிவோடு, அரங்கினில் பாத்திரமாக வாழப் பழகிவிட்டோமே தவிர, எமது மண் சோலைவனத்தில் இருந்து பாலைவனமாக மாறி நிற்கின்ற பரிதாபத்தை உள்வாங்கியதாக இல்லை.

வடபுலத்துக்குத் தேவையான குடிதண்ணீரை, நல்லதோர் குடிதண்ணீர் தொழிற்சாலையை நாமே உருவாக்கவல்ல முதீட்டுப் பிரமுகர்களை வைத்திருந்தும், நாம் கொழும்புக்குப் பாத்திரமாகவும், பத்தியமாகவும், புத்திசாலித்தனமாகவும், புண்ணிய சீலராகவும், படம் காட்டுபவராகவும் இருக்கிறோமே தவிர, எமது மண்ணுக்கு வாழ்வளிப்பவராக நாம் இன்னும் ஆகவில்லை! மேடை போட்டு, எமது கெட்டித்தனங்களை மூட்டை மூட்டையாகக் அவிழ்த்துக்கொட்டி, கண்காட்சி வைத்து, தங்க விருதுகளை தாம்பாளத்தில் வைத்து செங்கம்பள பதவிக்கும், உதவிக்கும் பணத்தைச் சம்பாதித்து வசூல் மன்னனாக அவதாரம் எடுக்கிறோமே தவிர ஆகச்சிறந்த செயற்றிட்டத்தை மூளைசாலிகள் முறைப்படுத்த முயலவில்லையே என்பது மனதின் பாரமாகும். வடபுலநீரைத் திட்டமிட்டு முகாமை செய்தால் கொழும்புக்கு நாம் வட்டிக்குக் கடனும் வழங்கலாம். காலமும் விதிக்கலாம். நாமோ கட்டடங்களிலேயே வடபுல சாதகத்தைச் சரிக்கட்டுகின்றோம். பாலைவனமாவது திண்ணமே!





“ கட்டடப் பெருக்கமும், கோபுர நெருக்கமும் தாராளமாகத் தேறியுள்ள நிலையிலே, நிலமும், நீரும், வனமும், வரங்களும் எமக்குத் தெரியாமலேயே நாள்தோறும் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாமோ கல்லும், மணலும், சிமெந்தும், கருங்கல்லும் இருந்தால் கதிரைகளில் வாழலாம் என்ற அதீத அபார அசாத்தியத் துணிவோடு, அரங்கினில் பாத்திரமாக வாழப் பழகிவிட்டோமே தவிர, எமது மண் சோலைவனத்தில் இருந்து பாலைவனமாக மாறிநிற்கின்ற பரிதாபத்தை உள்வாங்கியதாக இல்லை.

# வரலாற்றை பறைசாற்றும் ‘தமிழாராய்ச்சி மகாநாட்டு ஆய்வுத்தொகுதி’

பா.குமுதன்.


தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில், “வரலாற்றை பறைசாற்றும் வன்னிபிராந்திய தமிழாராய்ச்சி மகாநாட்டு ஆய்வுத்தொகுதி” என்ற நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

**“எல்லை வடக்கில் எழில் யாழ் பரவுகடல் பல்லோர் புகழருவி தெற்கெல்லை - நல்லதிருக் கோணலை கீழ்பால் கேதீச்சரம் மேற்கில் மாணத்திகழ் வன்னி நாடு”.** என்ற பாடல் வன்னிப் பகுதியின் நிலமுடிவுகளை தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அடங்காப்பற்று என்று அழைக்கப்படும் வன்னிமண் தமிழர்களின் நெடிய பாரம்பரியத்தின் உட்கிடக்கைகளையும் வரலாற்றையும் வாழ்வியலையும் தன்னுள் புதைத்து வைத்திருக்கின்றது.

ஒரு மக்கள் குழு தமது தற்கால இருப்பின் முகாந்திரங்களை வெளிப்படுத்தவும், எதிர்கால இருப்புக்களின் வழிமுறைகளை வகுத்துக்கொள்வதற்கும் சென்றகால வரலாற்றினை தொட்டுச்செல்வது அவசியமாகின்றது.

அந்தவகையில் வன்னியின் தொன்மை, அங்கு வாழ்ந்த குடும்பங்களின், பண்பாட்டு வாழ்வியல், அரசாட்சி, பற்றிய சான்றுகள் வன்னியை ஆக்கிரமித்தவர்களின் குறிப்புக்களில் இருந்தே கிடைக்கப்பெற்றுள்ளது. அவையும் பூரணமானவையல்ல. ஆயினும் எண்ணற்ற குளங்கள், மண்ணில் புதையுண்டு மக்கிப்போயுள்ள எச்சங்கள், நீர் நிலைகள் போன்றவை வன்னியில் ஒரு பெருஞ்சந்ததியின் செழிப்பான இருப்புக்களை புலப்படுத்திச்செல்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் வரலாறு முழுமையடைவதற்கு வன்னியின் தொன்மைகள் சீராக நிறுவப்படவேண்டும். அதற்கு அடித்தளம் இடும் வகையில் வன்னிபிராந்திய தமிழாராய்ச்சி மகாநாட்டில் முன்வைக்கப்பட்டிருந்த கட்டுரைகளின் ஆய்வுத்தொகுதியான நூல் வெளியீட்டு விழா நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.






தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக வேந்தரும் அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் தலைவருமான பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை வகித்தார். வாழ்த்துரையை வவுனியா பல்கலைக்கழக துணை வேந்தர் மங்களேஸ்வரன் நிகழ்த்தியதுடன், வெளியீட்டு உரையை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. இரகுபரனாலும், நூல் அறிமுக உரை வரலாற்று ஆய்வாளர் கலாபூசணம் அருணா செல்லத்துரையாலும் நிகழ்த்தப்பட்டது. இதன்போது நூலின் முதற்பிரதியினை பூ.பத்மசீலன் பெற்றுக்கொண்டார்.

அடங்காபற்று தொடர்பான பல தகவல்கள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டிருப்பது சிறப்பு. வரலாற்றை ஆய்வு செய்வதற்கும், அதனை ஒப்பீடுசெய்வதற்கும் இந்த நூல் நிச்சயம் துணை புரியும் என்பதில ஐயமில்லை.

வன்னி மண்ணையும், வாழ்வியலையும், நேசிப்பவனுக்கு இது ஒரு சான்றாதாரமே.

நிகழ்வில் கருத்துரைத்த யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் சி.பத்மநாதன்...

ஒவ்வொருவரும் தனது சமூகத்தில் அக்கறை கொண்டு தமது துறைகளிலே முன்னேற்றத்திற்கு பங்கீடு செய்தாலே இந்தச் சமூகம் வாழும். அபிலாசைகளை ஒருபக்கம் வைத்துவிட்டு, நாம் எமது இருப்பை பாதுகாக்கவேண்டும். தேவையில்லாத வழியில் இளைஞர்கள் சென்று மாட்டிக்கொள்ளக்கூடாது. சரியான முறையில் சிந்தித்து இந்த சின்னங்களை பாதுகாப்பதற்கும் அவற்றை அடையாளம் காண்பதற்கு உதவிபுரிய வேண்டும். பல சின்னங்கள் காடுகளிலே காணப்படுகின்றன. இவற்றைப் பார்க்கும்போது வன்னிக் குடித்தொகையிலும் பொருள் வளத்திலும் இலங்கையில் முன்னணியில் இருந்த பிராந்தியமாக இருந்திருக்கின்றது. ஏன் அந்த நிலையை மீண்டும் அடையமுடியாது என்பது தான் தற்போது உள்ள கேள்வி - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1937



மறைவு 17 . 04 . 2023

## திரு. வயிரமுத்து கதிர்காமநாதன்

(ஓய்வுபெற்ற மருந்து கலவையாளர்)

பெரியநாவலடி கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் ஞானவைரவர் ஆலயம், பெரிய நாவலடி ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாவுமாகிய திரு. வயிரமுத்து கதிர்காமநாதன் அவர்கள் கடந்த (17.04.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வயிரமுத்து கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மகனும், சின்னையா பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், அமரர் மனோன்மணியின் அன்புக் கணவரும், கௌரிமாலா (Bharin), நகுலேஸ்வரன் (USA), ஜெகதீஸ்வரன் (USA), நந்தினி (Canada), ஜெயந்தினி (USA), ஜெயகௌரி (SDO, Varani) ஆகியோரின் தந்தையும், அமரர் சிற்றம்பலம், சறோஜா (USA), அபிராமி (USA), சிவபாலன் (Canada), நந்தகுமாரன் (USA), ஜெயகுமார் (Postman-Kodikamam) ஆகியோரின் மாமனாரும், கௌசல்யா, குருபரன், ஹரிகரன், அட்சிகா, ஐஸ்வர், தட்சிகா, லிந்துஜா, விபுநந்தா, விபுலா, விஸ்னிகா, பிரதுஷன், லக்ஷிகா, ரிசானுகா, ரிசிகேசன் ஆகியோரின் பேரனும், அபிநாஷின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியை களுக்காக வேவிள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

077 801 2258, 0777 111 241,
076 625 6065
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39666) A-1

# விழி நீர் அஞ்சலி

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக எமது ஆலயத்தின் முகாமையாளராகவும், தர்மகர்த்தா சபை உறுப்பினராகவும் இருந்து ஆலய வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் ஆன்மீக கருமமாற்றி அமரத்துவமடைந்த

## உயர்திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்



அவர்களின் ஆத்மா சாந்தியடைய மாவடி விநாயகனின் பாதார விந்தங்களை வழுத்தி வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை,
மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடி
பிள்ளையார் ஆலயம். மீசாலை.


(CR 39668) A-1

## மஹோற்சவம்

மல்லாகம் பழம்பதி திருமுருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளைமறுதினம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளன என மேற்படி ஆலய ஆதீன கர்த்தா மு.நாகேந்திரசர்மா அறிவித்துள்ளார்.

(யு-66)

# மரண அறிவித்தல்



தோற்றம் 29.10.1943
மறைவு 18.04.2023

## சின்னத்தம்பி இராமலிங்கம்

(மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும், முகாமையாளரும்)

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமலிங்கம் நேற்று (18.04. 2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற அதிபர்), பதஞ்சலி அம்மாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இலக்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், யோகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, குமாரலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், இராஜேஸ்வரி, சௌபாக்கியநாயகி, சண்முகநாதன், பத்மதேவா, வள்ளிநாயகி, செல்வரத்தினம், மரகதவல்லி, குமாரசாமி, கனகமணி மற்றும் மங்கையர்க்கரசி, தவமணி, மீனலோசினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2023) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 39667)1-6

077 1138811

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 02 . 1940



மறைவு 17 . 04 . 2023

## திருமதி பரிமளகாந்தி இரத்தினசபாபதி

யாழ். திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரிமளகாந்தி இரத்தினசபாபதி கடந்த (17.04.2023) திங்கட்கிழமை பத்திரகாளியம்பாள் திருவடி அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான சிவனடியார் (ஆசாரியார்) செல்லக்கண்டு தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், அமரர்களான நடராசா தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் இரத்தினசபாபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் சிவசண்முகநாதன் (நல்லூர் சிவா) அவர்களின் பாசமிகு தாயாரும், அமரர்களான நாகேஸ்வரி, முத்துக்குமார் மற்றும் தர்மகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நாவலடி வீதி, திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24570) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 10 . 1951



மறைவு 18 . 04 . 2023

## நடேசு குகேந்திரன் (Mechanic குலம் அங்கிள்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வு சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு குகேந்திரன் அவர்கள் நேற்று (18.04.2023) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசு-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி, பிறேமா (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், பிருந்தாவனின் (Artistic Event Management) பாசமிகு தந்தையும், சோபிகா (HNB - வங்கி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மாமனாரும், பைரவ் இன் அருமைப் பேரனும், இராசேந்திரன் தனேஷ்வரி, ரேங்கராசா, கமலாதேவி, கலாநிதி, சாமளேஸ்வரி, ஜீவனராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாவதி, சித்திரவேல், காலஞ்சென்ற விமலாதேவி, கமலாவதி, யோகேஸ்வரி (திலகம்), லிங்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இல.06, சென்.ஆன்ஸ் லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 201 8833


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24518) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
21.12.1954



இறப்பு
17.04.2023

## பொன்னுத்துரை குலசிங்கம் (ராசா)

மில் ஒழுங்கை மல்லாகத்தை பிறப்பிடமாகவும் கனடாவை (50 Mississauga Valley Blvd, Mississauga ON L5A 3S2) வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை குலசிங்கம் கடந்த (17.04.2023) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் நேசராஜா, விமலசோதி, சிறீதரன், சகிலாதேவி, லோகேஸ்வரன், சந்திரவதனா ஆகியோரின் அன்பு சகோதரனும், அஜித்தா, அஜந்தா, மதுராளினி, துவாரகன், மதுராகவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பகீரதன் மற்றும் ராஜசீலன், சுதாகரன், ஸ்மாயா, பவிசா ஆகியோரின் மாமனாரும், துஷ்யா, அட்ஷயா, பிருத்திகன், சாத்விகன், வைசாலி, திசாலி, ஆருஷி, ஆரபி, ஆத்மிகா, ஆரிக், ஆரவ், ஆஷிகா, அஷ்வந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.04.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

077 104 1996 (விமலசோதி)
(கனடா)
001 6478187929

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24519) A-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
06.05.1976



இறப்பு
17.04.2023

## குலசேகரம்பிள்ளை ராஜ்மோகன் (சுதன்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம் பிள்ளை ராஜ்மோகன் (சுதன்) நேற்றுமுன்தினம் (17.04.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை மற்றும் இந்திராணி தம்பதிகளின் அன்பு மகனும், அக்சயனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நாகரத்தினம் தம்பதிகளினதும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பாக்கியம் தம்பதிகளினதும் அன்புப் பேரனும், எழிலரசி, கலையரசி, தமிழரசி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிறேம்குமார், கமலதீபன் ஆகியோரின் மைத்துனரும், வைஸ்ணவி, பஜிரதாரணி, அவந்திகா, அனந்திகா, தாட்சாயினி, தனுஸ், தாமிரா ஆகியோரின் மாமனாரும், சண்முகலிங்கம், சத்தியலிங்கம், கணேசலிங்கம், பத்மராணி, தங்கேஸ்வரி, இராஜேஸ்வரி, அன்னபூரணம், மகேஸ்வரி ஆகியோரின் மருமகனும், நிர்மலாதேவி, சந்திராதேவி, காலஞ்சென்ற லிங்கமூர்த்தி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (21.04.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் திருநெல்வேலி பால்பண்ணையடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (CS/50075)AH-1

தகவல்:
குடும்பத்தினர்

076 578 2063, 076 069 5381

## வாடகைக்கு

யாழ். நகரப் பகுதியில் கடை வாடகைக்குத் தேவை.

076 682 9867

(CS/50083)AH-1

## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் சலூன் ஒன்றுக்கு அனுபவமிக்க பணியாளர்கள் தேவை.

076 280 6356

(CS/50076) AH-1

# மரண அறிவித்தல்

## திருமதி கனகசபாபதி பரமேஸ்வரி

(சிவா ஸ்ரோர்ஸ், முத்து ஐயன் கட்டு)



தோற்றம் 24.03.1947 மறைவு 16.04.2023

காரைநகர் இராசாந் தோட்டத்தை பிறப்பிடமாகவும் முத்து ஐயன் கட்டு, புதுறோட், நீலிப்பந்தனையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி பரமேஸ்வரி கடந்த 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்க முத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான பரமு ஆறுமுகம் சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் கனகசபாபதியின் அன்பு மனைவியும், சிவானந்தன், காலஞ்சென்ற பரமானந்தன், கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தி, கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமி யும், நிது, ஆர்த்தி, ஆரதி, அனுஸ்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2023 வியாழக் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இந்த வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

நீலிப்பந்தனை,
காரைநகர்.

குடும்பத்தினர்
தொடர்பு: 0779590440

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-14 ஆஸ்பத்திரி வீதி 634, 636, 640 ,6401/1, 640/1 ஆதனப் இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் S.மருசலின் என்ற பெயரில் காணப்படு கின்றது.

தியோ சுஜறாஜ் உம் பெண் கரோலின், கொஸ்களின் ஒஸ்கார் சஞ்சய் அன்ரனி, கார்மலின் அன்ரனி, கிளறென்ஸ் பாக்கியநாதன் குறித்த ஆதனத்தை ஜெகநாதன் வைலொற் ஜெபமலருக்கு 08.06.2019 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இரட்ணம் இரகுராஜா முகதாவில் 10337ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

மருசலின் விக்ரர் ஜெகநாதன் மறுபெயர் மருசலின் ஜெகநாதன் குறித்த ஆதனத்தை 20.06.2019 திகதி யிட்டு பிரசித்த நொத்தாரிசு இரட்ணம் இரகுராஜா முகதாவில் 10352ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி அற்றோனித்தத்துவக்காரர் சின்னத்துரை ஜெயராஜா மூலம் ஜெகநாதன் வைலொற் ஜெபமலருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை சின்னத்துரை ஜெயராஜா அற்றோனிக்கத்துவக்காரர் மூலம் 07.04.2021 திகதி யிட்டு பிரசித்த நொத்தாரிசு இரட்ணம் இரகுராஜா முகதாவில்11328 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை மூலம் மருசலின் விக்ரர் ஜெகநாதன் மறுபெயர் மருசலின் ஜெகநாதனுக்கு வழங்கியுள் ளார்கள்.

குறித்த ஆதனத்தை மருசலின் விக்ரர் ஜெகநாதன் மறுபெயர் மருசலின் ஜெகநாதன் மூலம் 19.10.2021ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜா முகதாவில் 11580ம் இலக்கத்தில் நிலஅளவை வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றியுள்ளார்.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்,யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் தாதா கந்தளான்" ஆஸ்பத்திரி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு யாழ் மாநகரசபைக்குட்பட்ட J/73 கிராமசேவையாளர் பிரிவு

1) நில.பரப்பு 00 குளி 06.29
 கிழக்கு :- lot 5
 வடக்கு :- lots 5 1,4,6 2642ம் இலக்கத்தின்படி
 தெற்கு :- பொ.நாகலிங்கம் சுப்பையா.
 மேற்கு :- lot 1 சுப்பையா வீரசிங்கம்.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்,யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் தாதா கந்தளான்" ஆஸ்பத்திரி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு யாழ் மாநகரசபைக்குட்பட்ட J/73 கிராமசேவையாளர் பிரிவு

2) நில.பரப்பு 01 குளி 06
 கிழக்கு :- ந.பொன்னருக்கும் பங்காளருக்கும்.
 வடக்கு :- வீதி
 மேற்கு :- சு.வீரசிங்கத்தின் ஆதனம்.
 தெற்கு :- பொ.நாகலிங்கத்திற்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம்.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்,யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் தாதா கந்தளான்" ஆஸ்பத்திரி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு யாழ் மாநகரசபைக்குட்பட்ட J/73 கிராமசேவையாளர் பிரிவு

3) நில.பரப்பு 1குளி 0.6
 கிழக்கு :- பரஞ்சோதி மேரி மக்டலின் கைம்பெண் பரஞ்சோதி மறுபெயருக்குரிய ஆதனம்
 வடக்கு :- வீதி.
 தெற்கு :- பொ.நாகலிங்கமும் பங்காளரும்.
 மேற்கு :- சு.வீரசிங்கம்.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்,யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "கழுத்தறுத்தானும் தாதா கந்தளான்" ஆஸ்பத்திரி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு யாழ் மாநகர சபைக்குட்பட்ட J/73 கிராமசேவையாளர் பிரிவு

4) நில.பரப்பு .2 குளி 10.60
 கிழக்கு :- A.பற்றிசயராணி.
 வடக்கு :- ஆஸ்பத்திரி வீதி.
 மேற்கு :- சு.வீரசிங்கம்.
 தெற்கு :- பொ.நாகலிங்கம்.

தற்போது ஜெகநாதன் வைலொற் ஜெபமலர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது ஆதனவரி பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு / முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலி ருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஜெகநாதன வைலொற் ஜெபமலர் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(cr.39664) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்.
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# சபை நிதி 2023

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபை நிதியினை கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி, கட்டட திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி கட்டுமானம் மற்றும் கட்டிட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. **மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 16:00 மணிவரை 2023.04.19 ஆம் திகதியில் இருந்து 2023.05.03 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** அவர்களிடமிருந்து 2023.04.19 ஆம் திகதியிலிருந்து 2023.05.03 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2023.05.04 ஆம் திகதி பி.ப 1:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி. கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2023.04.26 ஆம் திகதி மு.ப.11:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/01 | கலைமதி வீதி 5 ஆவது ஒழுங்கை திருத்தம், புத்தூர் வடக்கு | 2.19 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 63 நாட்கள் | 22,000.00 | 2023.08.03 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/02 | மாலை வைரவர் வீதி திருத்தம், நீர்வேலி **(மீள் தாரிடல்)** | 1.87 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 19,000.00 | 2023.07.20 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/03 | விக்னேஸ்வரா வீதி, அம்மன் வீதி திருத்தம், அச்சுவேலி தெற்கு **(மீள் தாரிடல்)** | 1.47 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 15 000.00 | 2023.07.20 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/04 | நாயுன்மார்கட்டு பாரதி வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், கோப்பாய் | 1.83 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 19,000.00 | 2023.07.20 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/05 | கோப்பாய் உப அலுவலக கட்டிட திருத்தம், இருபாலை | 3.71 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (கட்டிட நிர்மாணம்) | 63 நாட்கள் | 38,000.00 | 2023.08.03 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/06 | பழைய தபால் அலுவலக வீதி திருத்தம், கோப்பாய் **(மீள் தாரிடல்)** | 3.66 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 63 நாட்கள் | 37,000.00 | 2023.08.03 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/07 | உடையார் வீதி திருத்தம், உரும்பிராய் | 1.24 | 90 நாட்கள் | C9 அல்லது C8 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 13,000.00 | 2023.07.20 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/08 | பொக்கனை மயான வீதி திருத்தம், உரும்பிராய் **(மீள் தாரிடல்)** | 4.24 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 63 நாட்கள் | 43,000.00 | 2023.08.03 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/09 | தையப்புல வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி | 2.01 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 49 நாட்கள் | 21,000.00 | 2023.07.20 |
| NP/14/41(13)/2/Council/ PII/2023/10 | வரிக்கம்பரை வீதி திருத்தம், புத்தூர் கிழக்கு | 2.92 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 63 நாட்கள் | 30,000.00 | 2023.08.03 |
| NP/14/41(13)/2/Council/ PIV/2022/01 | தச்சன்கலட்டி வீதி உப ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி தெற்கு | 2.01 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி கட்டுமானம்) | 63 நாட்கள் | 21,000.00 | 2023.08.03 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர், யாழ்ப்பாணம்.**
**2023.04.19**

(cr.37131) (2x 6)


# சுருண்டது அயர்லாந்து

அயர்லாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி 280 ஓட்டங்கள் மற்றும் ஒரு இன்னிங்ஸால் அபார வெற்றி பெற்றது.



நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 591 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் 4 வீரர்கள் சதம் கடந்தனர். திமுத் கருணாரத்ன 179 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 140 ஓட்டங்களையும், தினேஷ் சந்திமால் 102 ஓட்டங்களையும், சதீர சமரவிக்ரம 104 ஓட்டங்களையும் பெற்றனர்.

முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி ஆரம்பம் முதலே தடுமாறியது.

மூன்றாம் நாளான நேற்று அயர்லாந்து அணி 143 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. இலங்கை அணியின் வீரர் ரமேஷ் மெண்டிஸ் 52 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

448 என்ற வெற்றி இலக் நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அயர்லாந்து அணி 168 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்கள் மற்றும் ஓர் இன்னிங்ஸால் தோல்வியைத் தழுவியது. அயர்லாந்து அணி சார்பில் ஹெரி டெக்டர் 42 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கை அணி சார்பாக இரண்டாவது இன்னிங்ஸில் பந்துவீச்சில் ரமேஸ் மெண்டிஸ் 4 விக்கெட்டுக்களையும், பிரபாத் ஜயசூரிய 3 விக்கெட்டுக்களையும், விஷ்வ பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகன் விருதை இந்த ஆட்டத்தில் மொத்தமாக 10 இலக்குகளைக் கைப்பற்றிய பிரபாத் ஜயசூரிய தட்டிச் சென்றார்.

இரண்டு ஆட்டங்களைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் தற்போது 1:0 என்ற அடிப்படையில் இலங்கை முன்னிலை வகிக்கின்றது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது. (எ)

# விபத்தில் இளைஞன் காயம்

அரச பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்ட சந்தியில் இடம்பெற்றுள்ளது. கைதடி நவபுரத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே விபத்தில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை ஜனாதிபதிகளே பாதுகாக்கின்றனர்!

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளிப்படைக் குற்றச்சாட்டு

உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கை என்று கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். இப்போது பதவியிலிருக்கும் ஜனாதிபதியும் இதற்கு முன்னர் பதவியில் இருந்த ஜனாதிபதிகளும் உயிர்த்தஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளைப் பாதுகாக்கும் விதமாகவே செயற்பட்டனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கர்தினாலின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடைபெற்ற ஆட்கடத்தல்கள், காணாமலாக்கப்படுதல்கள், இனங்களுக்கெதிரான, மதங்களுக்கெதிரான வன்முறைகள், சட்டம் ஒழுங்கு என்பவற்றை மதிக்காத செயற்பாடுகள் எல்லாம் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்குடன் இடம்பெற்ற செயற்பாடுகளே. இப்படியான வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்படுகின்றனர். ஊழல் அரசியலை தத்தெடுத்துக்கொண்ட அரசியல்வாதிகள் உயிர்த்தஞாயிறு தாக்குதல் போன்ற விடயங்களை மக்கள் மனதிலிருந்து அழித்துவிட முயற்சிக்கின்றனர். ஆனால் நீதிக்காகப் போராடுவதே எமது நோக்கம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை நாங்கள் போராடுவோம். இப்போது நீதித்துறையில் ஊழல் மிக்க அதிகாரிகள் உள்ளனர். அரசியல் வன்முறைகளில் ஈடுபடுபவர்களை பாதுகாப்பதே இவர்களின் நோக்கம். இவர்கள் எதிர்காலத்திலும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக எதையும் செய்யக்கூடியவர்கள். இனிமேலும் இது போன்ற தாக்குதல்களை நடத்தக்கூடியவர்கள். இதன் காரணமாகவே நாங்கள் உயிர்த்தஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் சுதந்திரமாக உலாவி வருகின்றனர். இப்போதும் அதிகாரத்தில் உள்ளனர். தேவாலயங்களிலும் உல்லாச விடுதிகளிலும் கொல்லப்பட்ட 272 அப்பாவிகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நாம் போராடி வருகிறோம். எனினும் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை - என்றார். (அ-ம-6)

### யாழில்...

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு காய்ச்சலுக்கு சிகிச்சை பெறச் சென்ற ஒருவருக்கு கொரோனாத் தொற்றுக்குரிய அறிகுறி காணப்பட்டதையடுத்து அவருக்குச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக விடுதிகளில் சிகிச்சை பெற்று வந்தவர்களுக்கு கொரோனாப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 3 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். அனைவரும் தனிமைப்படுத்தல் விடுதியில் வைத்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தது. கொரோனாவின் திரிவு வைரஸால் இத்தகைய பாதிப்பு உருவாகியிருந்தது. அதேபோன்று தற்போதும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் 5 பேருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களில் ஒருவரது உடல் நிலை மோசமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஒ.5)

### கொரோனாச்...

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து போதனா மருத்துவமனையில் நோயாளிகளுக்கு கொரோனாச் சோதனை முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்தும் இந்தச் சோதனைகளை முன்னெடுப்பதற்கான அனுமதி போதனா மருத்துவமனையால் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கான சோதனையை முன்னெடுக்கவேண்டாம் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரால் நேற்று 'சூம்' செயலி ஊடாக முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலிலும் இந்தத் தகவல் சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வருபவர்கள் கொரோனாத் தொற்றுக்குரிய அறிகுறிகளைக் கொண்டிருந்தால், அவர்களுக்கு வேறு நோய்கள் இனங்காணப்படாவிட்டால் மாத்திரமே கொரோனாப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அமைச்சு வாய்மொழி மூலமாக அறிவுறுத்தியுள்ளது. (அ-ஒ.5)

### வெள்ளை...

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே இது தொடர்பில் பொதுமக்களும் பண்ணையாளர்களும் அவதானிப்புடன் செயற்பட வேண்டும் என்று தென்னை பயிர்ச்செய்கை யாழ். பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈக்களின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இதன் தாக்கம் அதிகம் உணரப்பட்டுள்ளது. இந்த ஈக்களின் தாக்கம் தென்னையில் மட்டுமல்லாமல், மாதுளை, உளுந்து, பயறு, வாழை போன்றவற்றிலும் பரவும் சாத்தியம் காணப்படுகின்றது.

இந்த வருடம் ஜனவரி மாதம் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக இது அடையாளப்படுத்தப்பட்டது. பின்னர் அது படிப்படியாக யாழ்ப்பாண மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு, யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவு ஆகிய பகுதிகளில் உள்ள தென்னைகளைத் தாக்க தொடங்கியுள்ளது. இதனை அடையாளம் கண்டு அழிக்காவிட்டால் பின்னர் இது தென்னைகளை மிகமிக அதிகளவில் தாக்கும். இது தென்னோலைகளில் தீவிரமாகப் பற்றிப்பிடிக்கும். பின்னர் படிப்படியாக ஒளித்தொகுப்பைக் குறைத்து உற்பத்தித் திறனில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

இதற்கான சிகிச்சை முறைகளாக நீர்ப்பாசனம் விசுறுதல், வேப்பெண்ணெய்க் கரைசல் மற்றும் சவர்க்காரத்தூள் கரைசலை கலந்து தென்னைகளுக்கு முற்றுமுழுதாக விசுறுதல், அக்டா என்ற இரசாயனப் பொருளை 15 நாள்களுக்கு ஒரு தடவை விசுறுதல், அங்கீகரிக்கப்பட்ட கிருமி நாசினிகள் விசிறல், கோதுமை மா மற்றும் அரிசி மா ஆகியவற்றை சேர்த்து ஒரு கிலோ மாவுக்கு 20 லீற்றர் தண்ணீரைக் கலந்து விசுறுதல் போன்றன காணப்படுகின்றன - என்றார். (அ-ம)

### எழுத்துமூலச்...

நீதிவான் நீதிமன்றம், வழக்கை அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்குத் தவணையிட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டு தினத்துக்கு முதல் நாளன்று தீவக நுழைவாயிலில் யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்று வட்டத்தில் நாகபூஷணி அம்மன் சிலையொன்று இனம்தெரியாதோரால் வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிலையால் போக்குவரத்துக்கு இடையூறு எனவும், மதங்களுக்கு இடையில் முரண்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு எனவும் தெரிவித்து அந்தச் சிலையை அகற்றுவதற்காக யாழ்ப்பாணப் பொலிஸாரால் வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. சிலைக்கு உரிமைகோரக்கூடியவர்கள் எவரேனும் இருப்பின் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் பல்வேறு இந்து அமைப்புக்களில் இருந்து சுமார் 30 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகினார்கள். அவர்களுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணிகளான என்.ஸ்ரீகாந்தா, வி.திருக்குமரன், கேசவன் சயந்தன், ஜொனி மதுரநாயகம், ரி.கணதீபன், ஜோய் மகிழ்மகாதேவன் ஆகியோருடன், என்.வேணுஜா, ரி.திவாகர், பி.அபிதன், பு.பானுப்பிரியன், சி.ரிஷிகேசன், சிறி.சிவஸ்கந்தசிறி, லக்சன், எஸ்.கஜேந்திரன், ஏ.திருமுருகன் ஆகிய சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த வழக்குத் தொடர்பில் பொலிஸாரின் வழக்கிடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தி சட்டத்தரணிகளான சிறீகாந்தா மற்றும் சுமந்திரன் ஆகிய இருவரும் நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர்.

மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா வழக்கில் சட்ட அடிப்படை கிடையாது என்றும் பொலிஸ் தரப்பு உரிய சட்ட ஏற்பாட்டை பின்பற்றவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். குறிப்பாக எவரும் முறைப்பாடு செய்யாத நிலையில் இவ்வழக்கு சட்ட அடிப்படையற்றது என்றும், சிலை காரணமாக அசௌகரியங்களோ அல்லது இடைஞ்சல்களோ தடையோ தமக்கு ஏற்பட்டிருக்கின்றது என்று எவரும் முறைப்பாடு செய்யப்படாதவிடத்து பொதுமக்களுக்கு எந்தவித அசௌகரியங்களும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதால் பொலிஸ் தரப்பு குற்றவியல் நடைமுறை சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றி வழக்கை தாக்கல் செய்ததைத் தவிர்த்திருக்கிறது எனவும் பொருத்தமற்ற விதத்தில் இரண்டு தனித்தனியான சட்டங்களை குறிப்பிட்டு வழக்கை முன்வைத்திருக்கிறார்கள் என்றும் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தமது சமர்ப்பணங்களில், இந்த வழக்கை வீதிகளுக்கு பெயரிடுதல் மற்றும் சிலைகள் நிறுவுதல் தொடர்பான சட்ட ஏற்பாட்டின் கீழ் பொலிஸார் முன்னெடுப்பதற்கு பதிலாக சட்டவிதிகளை முற்றிலும் புறக்கணித்து வழக்கை தாக்கல் செய்திருப்பதால் அதனை முன்னெடுக்க முடியாது என்று சுட்டிக்காட்டினார். பொலிஸார் தொலைபேசி மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு எப்படி வழக்குத் தாக்கல் செய்யமுடியும் என்றும் கேள்வி எழுப்பினார். அவற்றைக் கேட்டறிந்த மன்றம், எழுத்துமூல சமர்ப்பணங்களுக்காக மே மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டது. (அ-ம-66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத்தை நேற்று போராடி வென்றது மும்பை



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் மற்றும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் 14 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதரபாத் அணித்தலைவர் எய்டன் மார்க்ரம் முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தார். மும்பை அணிக்கு ரோகித் சர்மா, இசான் கிசான் இணை சுமாரான ஆரம்பத்தை வழங்கியது. அணி 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ரோகித் சர்மா நடராஜனின் பந்தில் ஆட்டமிழந்தார். இவர் 18 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்துவந்த கிரீன், இசான் கிசானுடன் இணைந்து 46 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்த நிலையில் இசான் கிசான் 38 ஓட்டங்களுடன் மார்க்ரமின் அபாரமான பிடியெடுப்பின் மூலம் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து வந்த சூர்யகுமார் யாதவ் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து மீண்டுமொருமுறை ஏமாற்றமளித்தார். 4ஆவது விக்கெட்டுக்காக கிரீனுடன் இணைந்த திலக் வர்மா ஆட்டத்தின் போக்கையே மாற்றினார். மார்க்கோ ஜான்சன் வீசிய 15ஆவது ஓவரில் இருவரும் இணைந்து 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க மும்பையின் ஓட்டவேகம் அதிகரித்தது. அடுத்து வந்த ஓவர்களிலும் சீராக ஓட்டங்கள் பெறப்பட நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 192 ஓட்டங்களைக் குவித்தது மும்பை இந்தியன்ஸ் அணி. திலக் வர்மா 37 ஓட்டங்களையும், கிரீன் 60 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

வெற்றிக்காக 193 ஓட்டங்கள் தேவைப்பட துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்பத்திலிருந்தே மும்பை அணியின் பந்துவீச்சாளர்கள் நெருக்குதல்களை வழங்கினர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹரி ப்ரூக், பெஹறன்ட்ரோப் வீசிய இரண்டாவது ஓவரிலேயே ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். மீண்டும் நான்காவது ஓவரை வீசிய பெஹறன்ட்ரோப் அடுத்து வந்த திரிப்பதியையும் ஆட்டமிழக்கச் செய்தார். 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய ஹைதராபாத் அணிக்கு மார்க்ரம் மாயங் அகர்வால் இணை சிறிது நம்பிக்கையளித்தது. மார்க்ரம் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்துவந்த அபிசேக் சர்மாவும் ஒரு ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். மறுமுனையில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மயங் அகர்வாலுடன் இணைந்த கிளாசன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 16 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து அகர்வாலும் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 19.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 14 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது ஹைதராபாத் அணி. மும்பை சார்பாக பெஹறன்ட்ரோப், மெரெடித், சாவ்லா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அர்ஜுன் டெண்டுல்கர், கிரீன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ம-ரி1)


## வேலை ஆட்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள
இனிப்புத் தொழிற்சாலைக்கு
வேலைக்கு பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 969 3210

## பணிப்பெண் தேவை

இளவாலையில் உள்ள
வீடொன்றுக்கு வீட்டுப் பணிப்பெண்
தேவை.
சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.

076 917 2569

(CS 50070) AH-1

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம்
அவெனியூவில் 1 3/4 பரப்பு
வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு:
077 732 6792


## மரண அறிவித்தல்

மலர்வு
11 . 01 . 1963



உதிர்வு
18 . 04 . 2023

### திருமதி கருணாகரன் விஜிதபாமினி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - வவுனியா பிரமண்டு வித்தியாலயம்)

387, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யமுனா வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணாகரன் விஜிதபாமினி நேற்று (18.04.2023) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கருணாகரனின் அன்பு மனைவியும், தனுஸ்சயன், வைஷ்ணவியின் அன்புத் தாயாரும், ராஜிதபாமினி, நனிதபாமினி, சுகிர்தபாமினி, லக்ஷிதபாமினி, கிருஷ்ணபாமினி, நவநீதன் ஆகியோரின் மூத்த சகோதரியும், இந்திரராஜா, சுகந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யமுனா வீதி, நல்லூர்.
T.P.: 077 052 8972
076 913 4035

தகவல்:
குடும்பத்தினர்

(cs 50072) (N-1)


## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**நிலப்பரப்பு**
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நன்னீரூற்று
* குடியிருப்பு சூழவுள்ள பகுதி
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

தொடர்பு:
077 076 0389
076 9119 371
076 7390 413

(CS 50073 B) A-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

* யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
* 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
* நன்னீரூற்று நிலம்,
* 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( 200.000/= )
* விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
* பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
* சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம்**
**காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079
076 733 6093

(CS 50073) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.